# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 123/2020 நாள்.14.08.2025

PW1- திரு, முருகானந்தம், த /பெ. திரு. செல்லையன்

2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

மூல பத்திரம் பார்த்தேனே அது எந்த தேதி என்றால் ஞாபகமில்லை. 05.4.1987 பாக பத்திரப்படி 1ஆம் பிரதிவாதியின் தகப்பனார் 1ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்ததை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். 05.4.1987 பத்திரம் எதன் அடிப்படையில் கிடைத்தது என்பதை படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன் 1ஆம் பிரதிவாதியின் அப்பா பக்கிரி மைதீன். தாவா சொத்து 1ஆம் பிரதிவாதியின் பாட்டனார் சொத்து என்று சொன்னார்களா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படும்போது 05.4.1987 குடும்ப ஏற்பாட்டு ஆவணம் அமலில் இருந்தது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 கிரய ஒப்பந்தம் எழுதுவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் ஆமாம். அவ்வாறு வில்லங்கம் போட்டு பார்த்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரை கேட்க வேண்டும். 22.7.1985 இல் பக்கிரி மைதீன் ராவுத்தர் 2ஆம் பிரதிவாதியின் கணவருக்கு ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் தெரியாது. என்னுடைய ஒப்பந்தத்தில் அடுத்த இரண்டு நாட்களில் கொடுக்கபட்ட தொகைகள் மேலெழுத்து ஆகியுள்ளதா என்றால் இல்லை. 5 லட்சம், 6 லட்சம், 10 லட்சம் தவிர வேறு ஏதாவது கொடுத்துள்ளேனா என்றால் பைனான்ஸ்க்கு கடன் வாங்கியுள்ளார். எந்த தேதியில் வாங்கயுள்ளார் என்றால் 7.11.2017 இல் வாங்கியுள்ளார். அதற்கு புரோநோட் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ஆவணத்தில் தயார் செய்து பூர்த்தி செய்தது யார் என்று எழுதபட்டுள்ளதா என்றால் திரு. முகிலன் வழக்கறிஞரை கேட்க வேண்டும். தாவா சொத்து சம்மந்தமாக தஞ்சாவூர் முதன்மை சார்பு நீதிமனறத்தில் 2ஆம் பிரதிவாதி அ.வ எண் 29/2017 போட்டது தெரியுமா என்றால் தெரியும். வா.,சா.ஆ.3 ஆவணம் 1ஆம் பிரதிவாதி எனக்கு கொடுத்தபொது அதிகார ஆவணம் என்றால் சரிதான். அ.வ எண் 29/2017 நடத்துவதற்கு எனக்கு கொடுக்கபட்ட பொது அதிகார ஆவணம் என்றால் சரிதான் ஆனால் நான் அந்த வழக்கை நடத்தவில்லை. அ.வ.எண்

29/2017 2ஆம் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்கிறார். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். வா.சா.ஆ.2 16.11.2017 ஏற்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.3 மூன்று நாட்கள் கழித்து ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு வாசகம் சொன்னது யார் என்றால் 1ஆம் பிரதிவாதியும் அவர் தகப்பனாரும். வா.சா.ஆ.1 செட்டில் பத்திரத்தில் கண்ட எல்லாசொத்துகளுக்கும் ஒப்பந்தம் போட்டேனா என்றால் இல்லை புல எண் 10/11 க்கு மட்டும் போட்டேன். அ.வ எண் 59/1987 தஞ்சாவூர் சார்பு நீதிமன்றத்தில் செட்டில்மெண்ட் தொடர்பாக வழக்கு நடந்தது என்றால் தெரியாது. அவ்வழக்கு 2ஆம் பிரதிவாதியின் கணவருக்கு பாதகமானதால் மேல்முறையீடு செய்திருந்தார் என்றால் சொல்லகேள்விதான் தெரியாது. வா.சா.ஆ.5 1ஆம் பிரதிவாதியால் 2ஆம் பிரதிவாதிக்கு 16.10.2019 இல் நூர் பைஜீரா பேகத்திற்கு எழுதி கொடுக்கபட்ட ஆவணத்தின் நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ5 ஆவணத்துடன் இணைப்பில் அ.வ எண். 59/1987 வழக்கின் மேல்முறையீட்டு தீர்ப்பு 155/1991 இல் ஏற்பட்ட தீர்ப்பு நகல் இணைக்கபட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 அமலில் இருக்கும்போது நான் 7.12.2017 தனிபட்ட முறையில் கடன் கொடுக்க அவசியம் என்ன என்றால் குடும்ப செலவு மற்றும் வழக்கு செலவுகளுக்கு கேட்டார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2 ஆம் பிரதிவாதி நூர்பைஜீரா கையெழுத்து இல்லை என்றால் ஆமாம். 1ஆம் பிரதிவாதியிடம் வெற்று பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டு ஒப்பந்தமாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரியல் எஸ்டெட் தொழில் செய்வதற்கு அனுமதி வாங்கியிருக்கேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு சட்டப்படி பதிவு செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் குடும்ப வழக்கு முடிந்தபிறகு செய்து தருவதாக சொன்னார். தாவா சொத்து 2ஆம் பிரதிவாதியின் கணவர் அனுபவத்திலும் அவருக்கு பின்னிட்டு 2ஆம் பிரதிவாதியின் அனுபவத்திலும் இருந்துவருகிறது என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் 1ஆம் பிரதிவாதிக்கும் உள்ள கொடுக்கல் வாங்கல் ஒப்பந்தம் 2ஆம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக உடமையாளரிடம் ஒப்பந்தம் போடாமல் உரிமை இல்லாதவரிடம் ஒப்பந்தம் போட்டதால் அது செல்லாது என்றால் சரியல்ல. அதனால் நானும் 1ஆம் பிரதிவாதியும் போட்டு கொண்ட ஒப்பந்தம் 2ஆம் பிரதிவாதியை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு

பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றும் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.